


# திறவுகோல்

2057 / ஆடி
மாத இதழ்

திறவுகோல் தனது 10 ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது...

படைப்பாளர்களுக்கும், வாசகர்களுக்கும்
எங்களின் நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# பேரிடரில் கல்வி – என்ன செய்யப் போகிறது இந்த அரசு?

தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையில் அதிக நிதி ஒதுக்கீடு துறையாகத் தொடர்ந்து கல்வித்துறையே இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்திய ஒன்றிய அளவில் தமிழ்நாடு கல்வியில் சிறந்து விளங்குவதற்கு பல்வேறு முன்னெடுப்புகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. குறிப்பாக, அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பெற்ற பலன்கள் ஏராளம். குடிமைப் பணிகள் மற்றும் உயரிய உயர் தொழில்நுட்ப கல்வி ஆகியவற்றில் கோலோச்சியதற்கு எண்ணற்ற எடுத்துக்காட்டுகளைக் கூற முடியும்.

மாணவர்களுக்காக வழங்கிய காலை உணவுத் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, புதுமைப்பெண், நான் முதல்வன் உள்ளிட்ட திட்டங்கள் அனைத்தும் முன்னோடித் திட்டங்களே ஆகும். வேறெந்த மாநிலங்களிலும் இல்லாத ஒன்று. மாணவர் நலத் திட்டங்களைப் பார்த்துப் பார்த்து திட்டம் போட்டு செதுக்கித் செதுக்கித் தந்தவர்கள் அந்த திட்டங்களை எல்லாம் செவ்வனே கொண்டு சேர்க்கும் ஆசிரியர் பெருமக்களின் குரலைச் செவிமடுக்க தவறியதன் விளைவே ஆட்சியை இழந்து பரிதாபமாக நிற்கின்றனர். இந்த படுதோல்வியை அம்மையார் அவர்களும் ஒருமுறை எதிர்கொண்டார் என்பதே வரலாறு.

ஒதுக்கப்படும் நிதியில் முக்கால்வாசி அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியத்திற்கே செலவிடப்படுகிறது எனும் ஒப்பாரியும் எஸ்மா மற்றும் டெஸ்மா எனும் ஊழியர் விரோத பணிநீக்க நடவடிக்கைகளும் அதற்கு இன்றியமையாத காரணங்கள் ஆகும். பொதுமக்களுக்கு வாரியிறைக்கப்படும் இலவச நலத்திட்ட உதவிகள் குறித்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருபோதும் கேள்விகள் கேட்பதில்லை.

அதேவேளையில், ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசுக்கு உள்ளது என்பதை மறந்து விடக்கூடாது. தற்போது பதவி ஏற்றிருக்கும் புதிய அரசு அண்மையில் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையிலும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியத்திற்கு அதிகம் செலவிடப்படுவதாகக் காட்டப்பட்டுள்ளது கெட்ட காலமானது.

பதவியேற்பு நாளன்றே பாடிய பஞ்சப்பாட்டை யாரும் ஏற்பதற்கில்லை. பொருளாதார வளர்ச்சிக் குறியீட்டில் இரண்டு இலக்கத்தில் நாட்டில் இரண்டாவது மாநிலமாகத் தமிழகம் திகழ்வதைத் தற்போதைய ஆட்சியாளர்களே பெருமிதத்துடன் கூறி வந்தது நோக்கத்தக்கது.

*நாட்டிலேயே தலைசிறந்த திட்டமாக விளங்கும் காலை உணவுத் திட்டத்தை 6 - 8 வகுப்புகள் முடிய நீட்டிப்பு செய்து எதிர்வரும் ஒப்பற்ற கொள்கைத் தலைவர் தந்தை பெரியார் பிறந்தநாளில் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிப்பு உண்மையில் பாராட்டத்தக்கது.*

*மேலும், கடந்த ஆட்சியின் அந்திம காலத்தில் மூடுவிழா நடத்திய இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தை தற்போதைய அரசு 'நிலவொளிக் கல்வி' எனும் புதிய பெயரில் தொடங்க முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் படித்த வேலையற்ற மாபெரும் மாற்றத்தை எதிர்நோக்கி வாக்களித்த பட்டதாரி இளைஞர்கள் பலருக்கும் பகுதி நேர, ஒரு மதிப்புமிக்க ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பை உருவாக்கி நம்பிக்கை அளிக்க முடியும்.*

*மேலும், அரசுப் பள்ளிகளை வாழவைத்துக் கொண்டிருக்கும் ஏழை, எளிய, அடித்தட்டு மற்றும் விளிம்பு நிலை குழந்தைகளின் கல்வியில் இடைவெளி விழச் செய்யாமல் தொடரச் செய்ய முடியும். ஏனெனில், அந்த குழந்தைகள் இந்த ஆட்சியின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கண்மூடித்தனமாக 'எளியவர்களின் மீட்பராக' நம்புகின்றன என்பது மிகையாகாது.*

*அதுபோல், கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக உயர்நிலைப்பள்ளிகள் முதற்கொண்டு தொடக்கப்பள்ளிகள் முடிய அரசு கொள்கை முடிவெடுத்து ஆயிரக்கணக்கான தலைமையாசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் காலிப்பணியிடங்களைப் பதவி உயர்வு மூலம் நிரப்ப பல்வேறு வாய்ப்புகள் இருந்த போதிலும் வேண்டுமென்றே நீதிமன்ற வழக்குகளைக் காரணம் காட்டித் தொடர்ந்து தள்ளிப்போட்டு வந்தது என்பது முற்றிலும் ஆசிரியர் விரோத நடவடிக்கையே ஆகும்.*

*அரசு தீர்க்கமான முறையில் யாருக்கும் பாதிப்பில்லாத வகையில் தக்க கொள்கை முடிவு மேற்கொண்டு தகுதியுள்ள ஆசிரியர்களைப் பணி மூப்பு அடிப்படையில் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்கிற நிபந்தனையுடன் பதவி உயர்வுகள் வழங்கி ஏழை எளிய அடித்தட்டு குழந்தைகளின் கல்வி நலனைக் காக்க வேண்டும் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.*

*இதுதவிர, தமிழகத்தில் அரசு நடுநிலைப் பள்ளி வளாகங்களில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்களுடன் இணைந்து மொத்தம் 2,381 மழலையர் (LKG & UKG) வகுப்புகள் 2019 ஆம் ஆண்டு முதற்கொண்டு தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதன் காரணமாக மாணவர் சேர்க்கை தொடர்ந்து அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆட்சியில் இதனை ஒழிக்க நடவடிக்கை எடுத்தபோது எழுந்த எதிர்ப்புக் குரல்கள் காரணமாக அந்த முயற்சி கைவிடப்பட்டதை நாடறியும்.*

தக்க கல்வித் தகுதியுடன் தற்காலிக பணி நியமனம் அடிப்படையில் ஐந்தாயிரம் ரூபாய் தொகுப்பூதியத்தில் பகுதிநேரமாக அரைநாள் மட்டும் பணிபுரிந்து வருவதை மாற்றி அவர்களை முழுநேர ஊழியராக ஆக்கி தக்க காலமுறை ஊதியம் வழங்கி இந்த 'சனங்களுக்கான அரசு' அவர்களைப் பாதுகாக்க வேண்டும். மேலும், அத்தகைய மழலையர் கல்வி பயிலும் குழந்தைகள் அனைவருக்கும் ஏனைய குழந்தைகளுக்கு வழங்குவது போன்று இலவச பாடநூல், குறிப்பேடுகள், சீருடைகள், காலணிகள், கற்றல் கற்பித்தல் சார்ந்த உபகரணங்கள் மற்றும் விளையாட்டுப் பொருள்கள் குழந்தை உளவியல் நிபுணர்கள் பரிந்துரையின் பேரில் வழங்கி உதவிட முன்வருதல் இன்றியமையாதது.

தவிர, கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக புதிய பணிநியமனங்கள் இல்லாமல் ஆயிரக்கணக்கான ஆசிரியர் காலிப்பணியிடங்களைத் தற்போதைய அரசு போர்க்கால அடிப்படையில் உரிய தகுதிகளோடு புதியதொரு மாற்றத்தை எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கும் இளைய சமுதாயத்தின் வாழ்வில் ஒளியேற்றி வைக்க வேண்டும்.

இப்புதிய பணி நியமனத்தில் ஏற்கெனவே சொற்ப தொகுப்பூதியத்தில் முழுநேரம் கடந்த ஓராண்டிற்கும் மேலாக பணிபுரிந்து வரும் பள்ளி மேலாண்மைக் குழு ஆசிரியர்களின் பணிக்காலத்தைச் சிறப்பு முன்னுரிமையாக எடுத்துக் கொள்ளலாம்.

அதுபோலவே, அரசானது தமது அன்றாட கல்வி சாராத சேவைகள் செய்வதிலிருந்து முழுநேரமும் கற்பித்தல் பணி செய்யும் பொருட்டு ஆசிரியர்களை விடுவித்து, அதற்கென மூன்றாம் தரப்பு தனியார் நிறுவனம் மூலம் கல்வியியல் மேலாண்மைத் தகவல் மையத்தின் அனைத்து வகை பணிகள், திறன்மிகு வகுப்பறை நிர்வாகம் மற்றும் கணினி வகுப்புக் கற்பித்தல் பணிகளை புற ஒப்படைப்பு அல்லது ஒப்பந்த சேவை (Out Sourcing) அடிப்படையில் நடுநிலைப்பள்ளிகள் முதற்கொண்டு கடந்த இரண்டாண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்து வரும் கணினி நிர்வாக பயிற்றுநர்கள் அனைவரையும் அதிலிருந்து விடுவித்து அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டிய தலையாய பொறுப்பும் கடமையும் அரசுக்கு உள்ளது.

இவை அனைத்திற்கும் மேலாக, தற்போது பணிபுரிந்து வரும் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர் பெருமக்களின் நியாயமான பழைய ஓய்வூதியம், இடைநிலை ஆசிரியர் ஊதிய முரண்பாடுகள், ஊக்க ஊதியம், பணிப் பாதுகாப்புச் சட்டம் முதலான கோரிக்கைகள் அனைத்தும் பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் அடக்கி ஒடுக்கி வந்துள்ளதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசர அவசியமாகும்.

ஏனெனில், இந்த புதிய அரசின் வரலாற்று மிக்க வெற்றியில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் வாக்கு வங்கியானது பாதிக்கும் மேலாக தங்களையும் தாங்கள் அளித்த

வாக்குறுதியின் அடிப்படையிலும் தங்கள் பக்கம் விழுந்துள்ளதை எளிதில் எடுத்துக்கொள்ள முடியாது. இஃது அவ்வளவு சீக்கிரம் யாராலும் உடைக்க முடியாத அல்லது உடைபடாத நிரந்தர வாக்கு வங்கியாகும். முதல்முறையாக நீங்கள் உடைத்துள்ளீர்கள்!

இந்த நம்பிக்கை நீடித்து நிலைத்து நிற்க தற்போதைய அரசு அனைத்து ஆசிரியர்களின் குரலையும் கட்டாயம் செவிமடுத்துக் கேட்க வேண்டும். பதவிக்கும் அதிகாரத்திற்கும் பணத்திற்கும் பகட்டிற்கும் ஆட்பட்டுப் போன சுயநலம் மிக்க ஆசிரியர் இயக்க தலைவர்களின் சொல்பேச்சை மட்டும் நம்ப வேண்டாம்.

உண்மைத்தன்மை குறித்து ஆராய்வதே சரி. கடந்த ஆட்சி மீது தீராத வெறுப்பும் பகையும் ஒவ்வொரு ஆசிரியர் மற்றும் அவரது குடும்பத்தினர் மத்தியில் தோன்ற இதுவே காரணம் என்பதில் மிகையாகாது. இவர்களின் போராட்டங்களை நசுக்கி விடலாம்.

பழிவாங்கப்பட்ட உணர்வை நசுக்க முடியாது அல்லவா? ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களை வேற்றுக் கிரகவாசிகளாக நினைக்க வேண்டிய அவசியமில்லை. அவர்களும் இந்த மாபெரும் மக்கள் திரளின் ஒரு பகுதியினரே என்று உணர்ந்தால் போதும்! இதுவே பாதி பிரச்சினைகளைத் தீர்த்து விடும்.

குருவித் தலையில் பலாக்காய் இருப்பதை உணர முடிகிறது. என்றாலும், தமிழ்நாடு மற்றுமொரு சோமாலியா  கிடையாது. கடன் அளவு கட்டுக்குள் இருப்பதாக ஒன்றிய அரசின் புள்ளிவிவர அறிக்கை கூறுவதே அதற்கு சாட்சி. திராவிட கொள்கை பேசும் அரசிற்கு ஆசிரியர்களுக்குச் செய்வதில் துளியும் மனமில்லாமல் போய்விட்டது.

குறிப்பாக சொல்ல வேண்டுமானால் விதைநெல்லுக்கு செலவுக் கணக்குப் பார்த்தார்கள்! இந்த புதிய அரசு அந்த தவற்றை ஒருபோதும் செய்ய வேண்டாம். தமிழக அரசியல் வரலாற்றில் இந்தமுறை தான் பள்ளிப் பிள்ளைகளும் ஆசிரியர்களும் ஒரே நேர்கோட்டில் நின்று மிகுந்த நம்பிக்கையுடன் நல்லதொரு மாற்றத்திற்கான புதிய அரசை தேர்வு செய்துள்ளனர்.

மேலும், தற்போது பேரிடரில் கல்வி இருப்பதாக அறியப்படுகிறது. இந்த அரசு அந்த நம்பிக்கையைத் துளிர்க்க வைக்கப் போகிறதா? அல்லது பொய்த்துப் போகச் செய்யப் போகிறதா?

—

எழுத்தாளர் மணி கணேசன்

# அது ஒரு நிலாக்காலம்

நடைபாதையில்
அனாதையாய்க் கிடந்த
சொல்லொன்றை
எடுத்து வீச மனமின்றி;
அதை -
கவிதைக்குள் திணித்து
உறவுகளின் பெருமுடிச்சில்
உழலச் செய்கிறான்
என்னைப்போலொரு
கவிஞன்.

சன்னல் கதவை
திறந்து வைத்தபடி
தூங்குகிறேன்.
இருளென்றும் பாராமல்;
நடுநிசியென்றும் அஞ்சாமல்;
கனவில்
தன்னந்தனியே நுழைகிறது
ஒரு கவிதை...!

நானும் வானும்
என் காதலியின் மடியில்
ஒன்றாய்
தலை வைத்திருந்தோம்
அது ஒரு நிலாக்கலம்.

விழுந்த துளிகளில்
எனக்கான ஒரு துளி
விழுந்து விட்டதா...?
இனி விழப் போகிறதா...?
எனும் வினா எழுப்புகிறாய்.
என்னைச் சுட்டி விழுந்து
எழுந்து விட்டதென்கிறேன்
நான்.

என் அறைக் கதவை
மெல்லத் திறந்திடுங்கள்.
உறங்கும் நினைவுகளை
எழுப்பலாகாது என்னால்.

இதயத்தின் கடவுச்சொல்
என்னவென்று சொல்
உனக்கு சிரமமின்றி
எடுத்துக்கொள்கிறேன்
உன் இதயத்தை.

உன் பெயரும் என் பெயரும்
ஒத்திருப்பது; ஒரு விதத்தில்
நம் காதலுக்கு சௌகர்யமே...!

இரு இதயங்கள்
பேசத் தொடங்கியதும்;
அளவின்றி நிரம்பி வழிகிறது
அன்பு.

புல்லோ...
விருட்சமோ...
எதுவாயினும் நுனி வரையில்
தன்வசம் வைத்திருக்கிறது
வேர்கள்.

- பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி; 9443139353



# இலை துறந்த

மொட்டை மரத்தின்
கரமெங்கும்
காத்திருக்கும் கிளிகள்
மொழிபெயர்க்கின்றன
வேரின் மௌனத்தை.

## புலியின் தடத்தில்

நடக்கும் ஆதிவாசிக்கு
மரணத்தின் வருகை பற்றி
பயமேதுமில்லை
ஓடிக் களைப்படையாத
கால்களுக்கும்
தேடிச் சலிப்படையாத
அவனது உழைப்புக்கும்
இடையே பசுமையடைகிறது
மழைக்காடு.
பெயரறியாப் பானமும்
வாயுணரா உணவும்
வகையற்ற புட்டியுமென
ஏந்தியவன்
நுழைந்ததும்
இருளில் மறைகிறது
வனமும் வனமகனின் வாழ்வும்.

## திசைக்கொன்றென மரக்கன்றுகள் நான்கை

ஏந்தி நிற்கிறேன்
வேரின் தியாகத்தை
வெளிக்காட்டுமென
குழந்தையிடமும்
பேரன்பின் ரகசியத்தைப்
பேசிச் சிரிக்கும்
மலரைப் போல புன்னகைத்திடும்
காதலியிடமும்
இலை துறந்தும்
வானத்தை நேசிக்கும்
கிளையைப் போல
எதிர்பார்ப்பற்ற துறவியிடமும்
விதை கூட்டி
உயிர் விரித்து
சுவை செறிந்தும்
மரத்தின் பிள்ளையென
பாதையைப் பிரசவிக்கும்
கனியின் தவமேந்திய
ஆசிரியரிடமும்
ஒப்படைத்து விட்டால்
உலகமெலாம்
பிரார்த்திக்க
நீளப்போவதில்லை
எந்தக் கரமும்.

## மழையை ரசிக்கும்

உன் விழிகளுக்குள்
வழிகிறது
விரிந்த குடையைத் தாண்டி
இன்னொரு மழை.

## மரத்திற்கான அழகை

வழங்கவேண்டி
வானம் அனுப்பிய
மழை
உன்னைக் கண்டதும்
தன்னை அழகாக்கிக்கொள்ள
ஒட்டிக்கொண்டது உன்னிடம்.
மழையைச் சுமந்து
நடக்கும்
உன்னைக் கண்டதும்
மரத்தில் பூக்கத் தொடங்கின
கண்ணாடி பிம்பங்கள்.

## யாருமற்ற தேயிலைத் தோட்டத்தில்

பிளிறத் தொடங்கிய
களிறுகளைத் தாண்டி
விளையாடிக் கிடந்த
சிறுத்தைகளின் விழிகளில்
நூற்றாண்டாய் மறைந்திருந்த
தாயன்பின் ஏக்கம்
ஊற்றென வழிகின்றன.
சுவைக்கடிமையாகிப்போன
மனிதனின் சுவாசத்திலிருந்து
மறையக் கூடும்
சுரண்டலின் பேராசையை
கழுவிவிட்டு
பெருநதியைப் பிரசவிக்கிறது
மலைச் சரிவு.
நீளும் தார்ச்சாலைகளும்
வானுயர்ந்த ஓய்விடங்களும்
நேற்றைய நிலச்சரிவில்
புதைந்து போன பின்னே
இயற்கை மூச்சு விடுகிறது
கட்டப்பட்ட தளையெல்லாம் உடைத்தே.

## குளம் பார்க்க வந்த

குடிமகன் கண்களில்
மீன்களும் தவளைகளும்
தென்படுகின்றன.
பறவைகளாக்கும் வித்தையைச்
சொல்லியபடி
அவற்றை கரத்தில் அடைக்கிறான்.
உறிஞ்சமுடியாத தண்ணீரின்
சுவை மாறிப்போனதையெண்ணி
யானையின் தும்பிக்கையில்
அட்டைகள்
ஒட்டிக்கொண்டதைப் போல
மலரின் மேனியில்
குடிகாரனின் உடைகள்.
சவம் குடித்த நெருப்பைப் போல
கரையெங்கும்
கானகத்தின் குருதி குடித்த
புட்டிகளின் உடைப்பில்
குளத்தின் மரணம்.

## கரையெங்கும் புகைகக்கியபடி

அகோரிகளின் தியானம்
நீரெங்கும் மீன்கள்
மேலெங்கும் மிதக்கும் பூக்களின்
சுவை மறந்தே
நகரும் பிணங்கள்
ஓடத்தின் மேலே மனிதர்கள்
உயிர் வளர்த்தே நகர
உருண்டோடி ஓட்டத்தை எட்டும்
பிணங்கள் நிறைய
ஆணும் பெண்ணுமாய்
வணங்கத்துவங்கும் புனிதத்தின்
வாழ்வில்
பெயரற்றுப் போகிறது
கங்கை.

## விரித்த முயற்சி

சிறகென உயர
உதிர்த்த பின்னே
இறகாகிறது
எண்ணிப்பார்க்க இயலாமல்
சிறகும் இறகும்
சந்திப்பைத் தவிர்க்கின்றன.
வானத்தை எட்டிய
கம்பீரத்தில் சிறகு சிலிர்க்க

மண்ணை முத்தமிட
எட்டிப்பார்த்த இறகு இளைப்பாற
பிரசவித்த பறவையின்
விழிகளில்
பெருமிதத் தருணங்கள்.

## இருளைப் பிரகடனப்படுத்த

ஒளியின் வருகை
ஒளியைப் பிரசவத்திட
இருளின் இருப்பு
ஒன்றில் ஒன்று
இருப்பதன் முகமே
வாழ்வின் நகர்தல்.

## நம்மைக் காப்பாற்ற

பலி கொடுக்கிறோம்
தினமும்
நமக்குப் பிடித்த
நம்மைப் பிடிக்காத
சொற்களின் கூட்டத்தை.
அவற்றின் சத்தத்தில்
வனங்களும் பாலையாகலாம்
மிருகங்களின் நடுக்கங்கள்
ஓயாமல் எச்சரிக்க
இன்னும் அதிகரிக்கிறது
சொற்களின் பிரசவம்.

## பறந்தபின்னும்

பட்டாம்பூச்சியின் நிழல்
படர்ந்து விடுகிறது
நினைவுகளின் சுவடுகளில்.



— இளையவன் சிவா,
கைபேசி: 9965359130

# புதிய கவிதை வடிவங்கள் – உலகம் தந்த கவிதைப் பரிமாணங்கள்

மூவரிக் கவிதை (Tercet)
Tercet (டெர்செட்) என்பது மூன்று வரிகளைக் கொண்ட கவிதை வடிவமாகும். Tercet என்ற சொல் இத்தாலிய terzetto (மூன்று) என்ற சொல்லிலிருந்து தோன்றியது. ஒரு டெர்செட் தனித்து ஒரு முழுமையான கவிதையாகவும் அமையலாம்; அல்லது நீண்ட கவிதையின் ஒரு பகுதியாகவும் இடம்பெறலாம்.

டெர்செட்டிற்கு உலக இலக்கியத்தில் ஒரே மாதிரியான கட்டாய இலக்கணம் இல்லை. சில மொழிகளில் எதுகை (Rhyme) அமைப்புடன் (AAA, ABA, ABC போன்றவை) எழுதப்படுகின்றன; சிலவற்றில் எதுகை இல்லாமலும் எழுதப்படுகின்றன. எனவே, மூன்று வரிகள் என்பதே இதன் அடிப்படை அடையாளமாகும்.

தமிழில், டெர்செட் வடிவம் பெரும்பாலும் சுருக்கமான சிந்தனை, ஒரு காட்சி, ஒரு உணர்வு அல்லது ஒரு

கருத்தை மூன்று வரிகளில் செறிவாக வெளிப்படுத்தும் முறையில் பயன்படுத்தப்படுகிறது. இது ஹைக்கூவைப் போல மூன்று வரிகளைக் கொண்டிருந்தாலும், ஹைக்கூவிற்குரிய இயற்கை, பருவச்சொல் (கிகோ), வெட்டுச்சொல் (கிரெஜி), கணநேர அனுபவம் போன்ற கட்டுப்பாடுகள் இதில் இல்லை.

## சிறப்புகள்

மூன்று வரிகளைக் கொண்ட கவிதை.
குறிப்பிட்ட அசை அல்லது சொல் எண்ணிக்கைக்கு கட்டுப்பாடு இல்லை.
எதுகையுடன் அல்லது எதுகையின்றி எழுதலாம்.
இயற்கை, காதல், தத்துவம், சமூகம், அரசியல், நினைவு என எந்தக் கருப்பொருளையும் எடுத்துக்கொள்ளலாம்.
ஒரு முழுமையான கருத்தைச் சுருக்கமாக வெளிப்படுத்தும்.

## எடுத்துக்காட்டுகள்:

1. இயற்கை
மாலைத் தென்றல்...
இலையுதிர் ஓசையில்
காடு உறங்குகிறது.

2. தத்துவம்
உடைந்த கண்ணாடி-
முகம் மாறவில்லை;
பார்வைதான் மாறியது.

3. சமூகம்
உயர்ந்த கட்டிடம்...
அதன் நிழலில்தான்
குடிசை.

4. காதல்
பேசாத வார்த்தைகள்...
கண்களில் மட்டும்
முழுக் கவிதை.

5. கல்வி
கரும்பலகை...
அழிக்கப்பட்ட எழுத்துகள்
நினைவில் நிலைத்தன.

## குறுங்கவிதை மற்றும் டெர்செட் - வேறுபாடு

குறுங்கவிதை:
மூன்று வரிகள்.
ஜப்பானியக் கவிதை வடிவம்.
இயற்கை, பருவச்சொல், கணநேர அனுபவம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம்.
மறைமுகமான காட்சிப்படிமம்.

டெர்செட்:
மூன்று வரிகள்.
மேற்கத்தியக் கவிதை வடிவம்.
எந்தக் கருப்பொருளையும் எடுத்துக்கொள்ளலாம்.
நேரடியான கருத்து, காட்சி அல்லது உணர்வை வெளிப்படுத்தலாம்.
குறிப்பிட்ட இலக்கணக் கட்டுப்பாடுகள் இல்லை.

மேலும் சில டெர்செட்டுகள்:

பழைய கடிகாரம்...
நேரத்தைவிட
நினைவுகளைக் காட்டுகிறது.
காலியான கூடு...
பறவையின் பாடல் மட்டும்
மரத்தில்.
மழை நின்றது...
குடையை மடித்துவிட்டு
குழந்தை ஓடுகிறது.

சுருக்கமாக: டெர்செட் என்பது மூன்று வரிகளில் ஒரு முழுமையான சிந்தனை அல்லது அனுபவத்தை வெளிப்படுத்தும் சுதந்திரமான கவிதை வடிவம். இதன் பலம், அதன் எளிமையிலும் செறிவிலும் இருக்கிறது. மூன்று வரிகளுக்குள் ஒரு காட்சி, ஒரு உணர்வு அல்லது ஒரு கருத்தை வாசகரின் மனதில் நிறுத்துவதே டெர்செட்டின் நோக்கமாகும்.

## மூவரிக் கவிதைகள்

1. மழை பெய்கிறது...
குடையைத் தேடாமல்
குழந்தைப் பருவத்தை.

2. பழைய ஊஞ்சல்...
இன்னும் ஆடுகிறது
என் குழந்தைமை.

3. பழைய பள்ளி...
இன்னும் நிற்கிறது
என் நினைவுகளில்.

4. கண்ணாடி முன்...
நானில்லை -
என் அப்பா.

5. பழைய பென்சில்...
எழுதத் தொடங்கியது
நினைவுகளை.

6. காகிதக் கப்பல்...
மழைநீரில் மிதக்கிறது
என் வயது.

7. புதிய மிதிவண்டி...
காத்திருக்கிறது
பள்ளி விடுமுறையை.

8. அம்மாவின் தாலாட்டு...
இன்னும் தூங்குகிறது
தொட்டிலுக்குள்.

9. பழைய படங்கள்...
ஒவ்வொரு பக்கமும்
ஒரு வசந்தம்.

10. குளத்துப் படிக்கட்டில்...
இன்னும் அமர்ந்திருக்கிறது
என் ஞாயிற்றுக்கிழமை.

—

### ராஜு ஆரோக்கியசாமி
1936, மதுராபுரி நகர்,
#1 சுங்கச்சாவடி,
பிக்சாண்டார் கோவில் (அ),
மண்ணச்சநல்லூர் (தா),
திருச்சி (மா).

# நட்சத்திரம் பூக்கும் நேரம்

ஏழு கடல்
ஏழு மலை தாண்டியே
நீயும் வருகிறாய்
இந்தக் கிளி பேச்சு கேட்கத்தான்
எத்தனை மும்முரம்

காதலின் கடைசி சொட்டு வரை
பருகி விடும்
உன் தொட்டிச் செடி நினைப்பின்
உருவம் நான்
இன்புற்று தழுவ
இதயம் பெயர்த்து வரும்
ஈரக்காற்று நீ

எனக்குள் இருக்கும் பாறையை
சிரித்தே சிற்பமாக்குகிறாய்
உனக்குள் இருக்கும்
தூரிகை முழுக்க மயிலிறகு

அத்தனை வகை முத்தங்களையும்
உதிர்த்து விடும் முத்த மரம் நீ
நிழல் தேசத்தில் இருந்தும்
எழுந்து வருகிறேன்

வெறுங்கையிலும் மருதாணி வாசம்
தரமுடிகிறது உன்னால்
சரம் சரமாய் சாயங்கால வேளை
மடி சாய்கிறது

அன்பின் சூட்டை
ஆலிங்கனத்தில் காட்டுகிறாய்
சிரிக்க சிரிக்க அவிழும்
உனைத்தான்
செரிக்க செரிக்க தின்னுகிறேன்

இருவரின் ஆகாயமும்
இணைந்து இளைப்பாறுகிறது
இப்போது நம் திசைகளில்
கோடி சிறகுகள்
கொண்டை ஊசி வளைவுகள்

நட்சத்திரம் பூக்கும் நேரம்
கிளம்புகிறாய்
உன்னை விட்டு
என்னை எடுத்து போவது
இம்முறையும் நிகழ்கிறது...!

## காற்று முட்டும் வெளி

பழையன போர்த்தும்
நினைவுகளில்
புது புது நீ கிடைப்பாய்

நினைவுக்கு பறக்கத் தெரியும்
பாதி வழியில்
மறக்கவும் தெரியும்

நினைவுக்குள் நீந்தி நீந்தி
கரை சேர முடியாத காலம்
ஒரு பெருங்கடல்

சிலுவையாகவும் நிற்கும்
சிறகாகவும் நிற்கும்
காற்று முட்டும் வெளியில்
சதா சிமிட்டும் நினைவுகள்

நிற்க

நினைவுகள் தான் நீ
நீங்கும் அதன் தேகத்தில்
நீ யாரோ எவரோ

## ஊர் நண்பன் பேசிக்கொண்டிருக்கிறான்

கைவிடப்பட்ட கிணற்றில்
கடைசியாக எட்டிப் பார்த்த
கார்மேகனுக்கு
பைத்தியம்
இன்னும் தெளியவே இல்லை

ராணி தூக்கிட்டு
செத்த பிறகு
உயிர் விட்ட மிச்சமாய்
கபீர் சிலுவை சுமந்தே
திரிகிறானாம்

டேவிட் தாத்தா வீடு
பாழடைந்து
வயதான
ஒரு கழுகின் நிழல் போல
சரிந்திருக்கிறது

இருந்த ஒரு திரையரங்கத்தையும்
மூடிவிட்ட பிறகு
திரைப்படம் எடுப்பதாக திரிந்த
ராஜா
உயிரையும் விட்டு விட்டார்.

எதிர்பாராமல்
சந்தித்துக் கொண்ட
ஊர் நண்பன்
பேசிக்கொண்டே இருக்கிறான்

எங்கள் காதல் அறிந்து
வேக வேகமாய்
சொந்தத்தில் கட்டிக்கொடுக்கப்பட்ட
என் காதலி பற்றி
கேட்கலாமா வேண்டாமா...!

— கவிஜி

ஓவியம்:
**மா. நிரல்யா,**
மூன்றாம் வகுப்பு,
சிங்கப்பூர்.



# அப்பத்தான்...

குடும்ப விழாவோ

உறவினர்
சகாக்களின்
இல்ல
விசேஷமோ

பண்டிகைகளோ
ஊர்த்திருவிழாவோ

நிகழ்வுகளுக்கு
முன்னரும்
நிகழும்
கணத்திலும்
உள்ளத்தில்
மகிழ்ச்சி

கடந்த பின்
கொஞ்சமாய் ஏக்கம்

ஆனால்
இடைவெளிகளில்
அவை வந்தால் தான்
அதற்கு
மதிப்பு

# உன் கையில் என்னை கொடுத்தேன்

தீர்ந்து போகும் என்றோ
இவ்வளவு தான் மொத்தமும்
என்றோ
சொல்ல முடியாதவர்

குடும்பமேன்மைக்கும்
செய்பணி சிறப்புக்கும்
தனித்திறமை வெளிப்படுத்தவும்

தனித்த பொழுதுகளில்
உன்னிடத்தில் என்னை
கொடுத்தேன்

யார் அவர்?

யோசிப்பு

# இதனாலும்...

பொருளாதார
காரணிகள் தான்
பெரும்பாலும்
பசிக்கான காரணம்
என்றாலும்

காலங்கடந்ததால்
கிடைக்காத உணவு
கிடைத்தாலும்
பிடிக்காத உணவு
இருக்கின்ற இடத்தில்
கிடைக்காத உணவு
பய பதற்ற உணர்வில்
உண்ணும் மனநிலை
இல்லாமை

என இதனாலும்
பசி இருக்கலாம் தானே?

## சொன்னது நீ தானா?...

அது தெரியும்
இது தெரியும்
என பட்டியிலிடாதே
செயலாக்கு

எனக்கு மட்டும் ஏன் தொடர்
தோல்விகள் என
கழிவிரக்கம் கொள்ளாதே
காரணம் தேடு

பிறிடத்து எதிர்ப்பாக்கும்
உண்மையை/ நியாயத்தை
முதலில் உனக்குள் கேட்டுப்பார்

விமர்சனங்களை வார்த்தையில்
இருந்து பிரித்து
அதன் நியாங்களை யோசி

என
சொன்னது 'புத்தி'
கேட்டது 'மனது''....

## மாற்று வார்த்தையில்...

எண்ணங்களின்
வேறுப்பாட்டில்

செயலாக்க பயணத்தில்
திருப்தியின்மையில்

முடிவுக்கான
நம்பிக்கையின்மையில்

உதட்டு மொழியின்
தெளிவின்மையில்

தகுதிக்கு மீறிய
மிகை இலக்கில்

எதிர்மனிதரிடம்
'தெரியலே'

என சொன்னால்

உடன்பாடின்மைக்கு
மாற்று வார்த்தை

## சுமை குறைப்பாய்...

இழப்பின்
வேதனையை

எதிர்பார்ப்பின்
பயத்தை

ஏளனத்தின்
கஷ்டத்தை

தோல்வியின்
நம்பிக்கையின்மையை

தனக்கானவர்களிடத்தில்
தயக்கமின்றி
கொட்டுகையில்

வேறு
சொல்லற்று

செயலுமற்று
மொத்தமாய்
நிறைந்திருக்கும்
மனச்சுமைகள்
காணாமால்
போவோதோ
குறைந்தபட்சமாய்
குறைவோதோ
உண்மையோ
உண்மை

அதிலிருந்து
மீண்டு வர
கிடைக்கும்
உதவியும்
ஆலோசனையும்
தன் முயற்சி எல்லாம்
வேறு கதை

## வேண்டுதல்

ஆலயத்தின் மணியில்
தனக்கான பிராத்தனை

அவசரஊர்தியின் ஒலியில்
மனிதனத்தினுக்கான வேண்டுதல்

## மௌனம் பேசியதே...

ஒத்தக்கருத்துக்கு
வார்த்தைகள் இல்லா
ஆமோதிப்பு...

கருத்து மோதலில்
வாதத்திற்கு வலு சேர்க்கும்
யோசிப்பு காலம்...

பிடிக்காத பேச்சுக்கு
பதில் சொல்லா
நிராகரிப்பு...

கடுஞ்சொற்கள் பரிசாக
கிடைக்கையில்
இப்படி ஆகி விட்டதே
என மனதுக்குள் புலம்பல்...

வெற்றிக்கான
பாராட்டில்
பதிலுரை இல்லா
மனதுக்குள்
ஆரவாரம்

தன்னிலும்
வலு உள்ளவர்களின்
நிராகரிப்பில்
செய்வதறியா
திகைப்பு...

## பலவற்றுக்கு...

உங்களிடம்
பேசலாமா

இந்த பணியை
செய்து விடுகிறாயா

அதை பற்றி
முடிவு எடுத்தாயா

கேட்டதுக்கு
என்ன தான் பதில்

புது முயற்சி
எடுக்கப்போகிறாயா

என வினவினால்

வாய் மொழியாய்
'அப்புறம்'

மறைமுகமாய்

'தள்ளிப்போடுதல்'

—

A.S. சுந்தரராஜன்,
மானாமதுரை



# தமிழ்யெமது பிறவிக்குத் தாயே!

பாவகை: சேவற் பாட்டுச் சிந்து

தமிழ்யெமது பிறவிக்குத் தாயே நெஞ்சில்
நிறைந்திடும்;
அமிழ்தென்றே மொழியினிலே அன்பாய்
என்றும் நிலைத்திடும்!

சிறப்பென்றே என்றென்றும் சிந்தை
ஓங்கித் தழைத்திடும்;
உறவென்றே யாவரையும் உண்மை
வழியில் இணைத்திடும்!

## திங்களைப்போல் குளிர்ந்திருப்போம் குள்ளத் தாரா

பாவகை : குள்ளத் தாரா சிந்து !

திங்களைப்போல் குளிர்ந்திருப்போம்
குள்ளத் தாரா - நெஞ்சில்
திண்ணமென மகிழ்ந்திருப்போம்
குள்ளத்தாரா!

நிலவென்றே நிறைந்திருப்போம் குள்ளத்
தாரா- என்றும்
நிலையென்றே சிறந்திருப்போம் குள்ளத்
தாரா!

அன்புடனே வாழ்ந்திடுவோம் குள்ளத்
தாரா - உலகில்
அறத்துடனே உயர்ந்திடுவோம் குள்ளத்
தாரா!

- வாழ்வியல் கவி
(சா. நாகூர் பிச்சை) திண்டுக்கல்.



# வாக்குறுதி

காதலிக்கும் போது
ஏராளமான
வாக்குறுதிகளை தந்தாய் தேர்தலுக்கு
முந்திய
எதிர்க்கட்சி
அரசியல்வாதி போல்!

அதுவே
திருமணத்திற்கு பின்
சொன்ன எதையும்
நிறைவேற்றாத ஆளுங்கட்சி
அரசியல்வாதி போல்
மாறிப்போனாய்!

ஐந்து வருடத்திற்கு
ஒரு முறையேனும்
அவர்களுக்கு உரிமைகள்
அதிகாரம் மாறும்
எனக்கு ஆயுள் முழுக்க
எந்த மாற்றமுமில்லை(யா)யே
உன்னோடனான
இல்வாழ்க்கையில்!

சொன்ன வாக்கை காப்பாற்று
இல்லையேல்
தூக்கி எறியப்படுவாய் என்று
என் சுட்டு விரல் நீட்ட
மக்கள் இல்லை
நான் உன் மனைவி!

—

மகிழை. சிவகார்த்தி

---

# பெண்மாலைப் பொழுது

நீ நிழலுக்கு
ஒதுங்கிய மரம்
கண்ணடிக்கிறது
உன்னைப்பார்த்து
இலை ஒன்றினை உதிர்த்து!

இரவுக் காதலனை
கூடுவதற்கு
மஞ்சள் பூசி
குளித்துக் கிளம்புகிறாள்
ஆதலால்
பெண்மாலைப் பொழுதோ!

சேலை கட்டிப் பார்க்கிறாள்
மகள்
அழகாகத் தெரிகிறது
தங்கத்தின் விலை!

—

நேசன் மகதி

# மண்ணுகும் மன்னர்கள்

எதிரி நாட்டு மக்களைக்
கொன்று விட்டதாக
மார்தட்டிக் கொள்கிறான்

பல துப்பாக்கி
அரணுக்கு மத்தியில்
வாகை சூடியதாக
தற்பெருமை கொள்கிறான்

உலகமே
தன் காலடியில் என
கட்டை விரலால்
அழுத்துகிறான்

குழந்தைகளின்
அழுகுரலை விட
இவன் புன்னகையை
அனைவரும்
காண வேண்டும் என
ஆதிக்கமும் செலுத்துகிறான்



கிட்லரும்
முசோலினியும்
மக்களைக் கொன்று குவித்த
அத்தனைக் கொடியவர்களும்
தன்னுள் கரைத்ததை
அமைதியாகச் சொன்னது
அவன்
காலடி கட்டை விரலிலிருந்து
விடுபட்ட மண்

— சா. கா. பாரதி ராஜா,
திம்மாவரம், செங்கல்பட்டு - 603101.
பேச - 9944315732

# திருவடி

பாதங்கள் மட்டும்
வெளியே தெரிய
தொட்டிலில்
உறங்குகிறது குழந்தை

பெற்ற தாய்க்கு வருகிறது
கருவறையில் இருக்கும்போது
அது உதைத்த ஞாபகம்
உற்ற தந்தைக்கு வருகிறது
தாயின் வயிற்றைத் தொட்டு
அதனுடன் கதைத்த ஞாபகம்

'பாதங்கள் இவை என்னின்
படிவங்கள் எப்படியோ?'
என்று வியக்கிறான் கம்பன்

தாள், மாணடி, இலானடி, அடி
என்று அடியொற்றி பாடுகிறான்
வள்ளுவன்

மலரடி, சேவடி
திருவடி என்று
அடிக்கு மட்டும்
ஆயிரம் பெயர்கள்

முடியை விட

அடிதான் முக்கியம்

கவிதையின்
அடிகளைப் பொருத்தே
அமையும் தொடை நயங்கள்
சிற்றெல்லையும்
பேரெல்லையும் அப்படியே

அடிகளால் கவிதை
நடப்பதுதான் நடை

குழந்தையின் நூபுரங்கள்
சிணுங்கும்போது
கோயிலின் கோபுரங்கள்
குனிகிறது.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி - 626102

---

# தாளிடப்பட்ட சாளரங்கள்..!!



தாளிடப்பட்ட சாளரங்கள்
அடைக்கப்பட்ட கதவுகள்
மீண்டும் தட்டப்படலாகாது

மூடப்பட்ட கதவுகளைப் பார்த்து
உங்கள் கதை முடிந்ததென்று
அழாதீர்கள்.

ஒவ்வொரு மூடிய கதவும்
இறைவனின் மௌனமான பதில்களில்
ஒன்று.

அவசரப்படாதீர்கள்.

ஒவ்வொரு அடைக்கப்பட்ட கதவும்
'இங்கே நீ பொருத்தம் அல்ல'
என்பதற்கான அறிகுறி மட்டுமே.

'இதுவே உனக்கானது' என்று ஒரே ஒரு
புதிய கதவைத் திறந்து, விதியையே
வசந்தமாக மாற்றிவிடும் அருளாளன்
அந்த இறைவன்

ஏனெனில்,
உங்கள் கண்ணீரை பிரார்த்தனையாகவும்,
உங்கள் பிரார்த்தனையை பேரருளாகவும்,
உங்கள் விதியை ஒளியாகவும்
மாற்றிவிடும் வல்லமை
இறைவனுக்கே உரியது.

உங்களுக்காக எழுதப்பட்ட
அருளின் கதவு திறக்கும்போது,
நேற்றைய எல்லா மறுப்புகளும்
அந்த ஒரு திறப்பின் பொருளாகிவிடும்.

நம்பிக்கையுடன் காத்திருங்கள்.

--

Dr ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்,
இலங்கை.

# துளிப்பா – பூனைக்குட்டி

இலையின் கீழே பாதுகாப்பு
பூனைகள் நினைப்பு
மிகவும் சிறப்பு

அழகான பூனைகள் சோகம்
மழையில் வாடும்
இலையில் மறையும்

இலை குடையாகும்
மழை பெய்யும் நேரம்
இயற்கை உதவும்

எந்த பிரச்சனை வந்தாலும்
நம்பிக்கையுடன் சமாளிக்கும்
மனதில் தைரியம்

பூனைக்குட்டிகள் அழகாகும்
அன்போடு பழகும்
நட்பாக பழகி கலக்கும்

—

எஸ். வீ. ராகவன்,
சென்னை

---

# நகரம்!

பச்சையம் தின்று
முளைக்கும் காங்கிரீட் காடுகள்!
திரிசங்காய் திகழும்
தொட்டித் தாவரங்கள்!

ஒன்றையொன்று உரசும்
தீப்பெட்டி வீடுகள்!
சுற்றத்தார் எவரென்றறியா
தீப்பெட்டிக்குள் முடங்கும்
தீக்குச்சிகள்!

கைபேசி
அலாவுதீன் விளக்கைத் தேய்த்தால்
வீடு தேடிவரும் அமுதங்கள்!

அட்சயப்பாத்திரத்தை
ஏந்தித் திரியும் ஈருருளிகள்!

சாலையை மொய்க்கும்
பலாப்பழ ஈ வாகனங்கள்!
செவிப்பறையின் தாங்குதிறன்
சோதிக்கும் வாகனசத்தங்கள்!

பிரசவம் எதிர்நோக்கும் பேருந்துகள்!
படிக்கட்டில் பயணிக்கும் வௌவால்கள்!

பிடிப்பில்லா மனிதர்களை
உதிர்த்துச் செல்லும்
வழிமாறா இரயில்கள்!
உரிமையாய் உடல் தடவி
பணம் கேட்கும் இடைப்பாலினர்!

தினந்தோறும் விலையில்லா
கார்பன் முக ஒப்பனை!
விடாது தொடரும்
மணக்கும் ஆறு!

நகரமென்றால் நரகமெனவும்
இவை போல பலவுமென...
வாய்கூசாது சொல்பவர் பலரது
வாழ்வாதார கொழுக்கொம்பு
இதுவென்பதும்

பேரிடர் காலத்தில்
துயர் துடைக்கும்
தூயவுள்ளங்களின்
உறைவிடமென்பதும்
பலருக்கும் புரிவதில்லை!

—

பா. சிவகுமார்

---

# பேச்சு பேச்சா இருக்கனும்!

இப்போதிருக்கும் பல பிரச்சனைகளில் இந்த 'பேச்சு' ம் ஒன்றாக இருக்கிறது.

பலருக்கு கருத்து சொல்ல ஆசை இருக்கிறது. ஆனால் சொல்லும் கருத்தில் ஆய்வு இருக்கிறதா என்றால் இல்லை. என்ன பேசுகிறோம் என்று புரிபடுவதற்கு முன்னே பேசி விடுவது அதில் இருக்கும் சிக்கல். ஆழ்ந்த புலமை இருந்தால் மட்டுமே பேச வேண்டும் என்று சொல்லவில்லை. பேசுவதில் அனர்த்தம் இருக்கிறதா என்று யோசிக்க வேண்டும். பேசுவதைத் தெளிவாக பேசுகிறோமா.. திணறுகிறோமா.. சமாளிக்கிறோமா... சாயம் பூசுகிறோமா என்று கேட்பவர்களுக்கு சுலபமாக புரிந்து விடும்.

ஒரு காலம் இருந்தது. யார் என்ன பேசினாலும்... ஆதியும் புரியாமல் அர்த்தமும் புரியாமல் கை தட்டிக் கொண்டிருந்தது. இது வேறு உலகம். சும்மாவே கை காலை பிச்சு வீசி விடுவார்கள். இதில் சொல்ல நினைப்பதை விட்டு சொற்கள் கூடாமல் உவமை கூடாமல் உதாரணம் கூடாமல் உளறி வைத்தால் தூக்கிப் போட்டு மாற்றி மாற்றி பந்தாடவே செய்வார்கள்.

சொற்களை கோர்வையாக கோர்க்க தெரியாமல்... எங்கோ ஆரம்பித்து எங்கோ விட்டு.. எதையோ தொடர்வது... ஒரு வாக்கியத்தை ஆரம்பித்தால் அதை முடிக்கும் முன்னே வேறு வாக்கியத்துக்கு தாவுவது.. வாக்கியத்தில் கடைசி சொற்கள் மிகவும் முக்கியம். ஆனால் பல மேடைகளில் ஒலிவாங்கியை எட்டுவதற்கு முன்னே அடுத்த சொல் முந்திக்கொண்டு வந்து மூச்சு திணறி விடுகிறது.

ஏன் இவ்வளவு அவசரம். நின்று நிதானமாக தெளிவாக சொல்ல வந்ததை நேரடியாக சொல்லி விடலாமே. அறிவுரை சொல்லும் பாவனைக்குதான் ஆளாளுக்கு அடித்து நொறுக்கிறார்கள். தர்க்க ரீதியில் ஒரு விடயத்தை அணுகி இதுதான் என் கருத்து என்று சொல்வதற்கு ஏன் இத்தனை குழப்பம்.

இதில் உதாரணம் வேறு. நேராக சொன்னாவே விடயம் புரிந்து விடும் பாடத்தை.. உதாரணம் என்ற பெயரில் வாயைக் கொடுத்து மாட்டிக் கொள்வது இருக்கிறதே... பரிதாபம். எல்லாம் தெரிந்த உடல்மொழி உடன் இருந்தே ஆப்பு வைக்கும். கவனம்.

எங்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.. அதுவும் தெரிவதில்லை.. எங்கு இறக்கி ஏற்ற வேண்டும் அதுவும் புரிவதில்லை. முன்னால் இருப்போனெல்லாம் முட்டாளென்று நினைத்துக் கொண்டு உளறிக் கொட்டுவது அபத்தம். இதில் அடுத்த வரி மறந்து போகையில் மேசையை அடித்து கவனத்தை திருப்புவதெல்லாம் ரொம்ப பழைய அணுகுமுறை. துப்பி விடுவார்கள். சுருக்கமாக கச்சிதமாக இதான் விடயம். இதைத்தான் சொல்ல வந்தேன் என்று சொல்லி விடுவதில் என்ன சிக்கல். ஏன் சுற்றி வளைத்து பேசி.. நான் ஒரு இது என்று காட்டிக்கொண்டு அந்த இதையும் சரியாக காட்டத் தெரியாமல் மாட்டிக் கொண்டு முழிக்க வேண்டும்.

கையில் குறிப்பு வைத்துக் கொள்வது ஒன்றும் பெரிய குற்றம் அல்ல. ஒன்று இயல்பிலேயே பேச்சு அதுவாக கொட்ட வேண்டும். அல்லது பார்த்து படித்தால் அதில் ஒரு லாவகத்தன்மையைக் கொண்டு வந்து சொல்ல வந்ததை சொல்லி விட வேண்டும்.

அதே போல மேடை கிடைத்தால்... ஒலிவாங்கி கிடைத்தால் கத்தத் தொடங்கி விடுகின்றன பாழடைந்த தொண்டைகள். இப்போது தான் ஆளாளுக்கு அலைவரிசை இருக்கிறதே. குதறி கூறு போடுகிறார்கள். மற்றவர்களுக்கு சொல்வதற்காகவேதான் இந்த பிறவி என்பது போலவே அப்படி ஒரு பிடிவாத தனம். தற்போது ஒரு வியாதி பெருகி வருவதை கண்கூட காண முடிகிறது. வாயை கோணித்துக்கொண்டு அறிவுரை சொல்வது.

அவனுக்கு நடந்த சிக்கல்களை பொதுவெளியில் வைத்து மற்றவர்களுக்கு அறிவுரை சொல்வது. யாருக்கோ மக்கள் முன் நின்று சாவல் விடுவது... பெருந்தொற்றாய் இது மாறும் முன் தடுக்க வேண்டும். கொஞ்சம் பணம் சேர்ந்து விட்டால் முன் பட்ட சிரமங்களை பொதுவெளியில் போட்டு கம்பீரம் தேடுவது. என்னவோ ஊருக்காக சிரமப்பட்டு உழைச்சவன் மாதிரி. உனக்காகதான உழைச்ச. இதுல என்ன பெருமை வேண்டிக்கிடக்கு.

எப்போதும் யாரிடமும் சண்டைக்கு காத்திருப்பது வியாதிதானே. வாயைக் கொடுத்து வம்பை வாங்கிக் கொள்ளும் வசீகரம் ஆரம்பத்தில் இனிக்கும்... அப்புறம் வழக்கானால்

கசக்கும். ஒரு விடயத்தை பத்தி பேச வேண்டும் என்றால் அதற்குண்டான விபரங்களை கையிலோ மனதிலோ வைத்திருக்க வேண்டாமா.

தெரியாத விடயங்களுக்கு சமாளிப்பு என்ற பெயரில் உளறிக்கொட்டினால் கெட்டது கதை. தெரியவில்லை என்றால் நேர்மையாய் தெரியவில்லை என்று சொல்லி தெரிந்து கொள்ள முயற்சி செய்தலே வளர்ச்சிக்கு உதவும். மற்றபடி வெற்று சவால் வெற்று முட்டு. தனக்குத் தெரிந்த சிற்றறிவை அந்த அளவிலேயே சொல்வதில் எந்தப் பிரச்சனையும் இல்லை. அதை பெரிதாக உருவப்படுத்தி முன் வைத்தால் மூக்குடைதல் உறுதி.

இன்றைய ஊடக வளர்ச்சி காலத்தில்... எந்தச் செய்தி உண்மை... எது நிழல்... எது சாயம்... எது கற்பனை என்று கண்டுபிடிப்பது கடினம். ஆக பகிரி முன்னோக்கி செய்திகளை அப்படியே பொதுவெளியில் அடித்து விடுவது அசிங்கத்தை ஏற்படுத்தி விடும். சரிப்பார்ப்பு செய்யாமல் தெரியாத விடயத்தை மற்றவருக்கு எடுத்துரைக்க கூடாது. சான்றோர் சபையில் சறுக்கினால் சங்கு தான். அதுவும் எது ஒன்றுக்கும் திரைப்பட வசனம் போலவே பேசுவது நகைச்சுவையாக இருக்கிறது. அதுவும் அண்ணாமலை ரஜினி போலவே எதுக்கெடுத்தாலும் சவால். எந்த உலகத்தில் இருக்கிறார்கள். திரையைத் தாண்டி தெருவுக்கு வாங்க சகோதர்களே.

சொல்ல வேண்டியதை சொல்லும் போதே தெளிவாக விளக்கி விட்டால் பிறகு சொன்னதற்கான விளக்கம் சொல்லத் தேவையே இல்லை. முதல்ல வாய்க்கு வந்ததையெல்லாம் பேசுவதை நிறுத்த வேண்டும். உள்ளக்குமுறல் வேறு... உளறல் வேறு. இரண்டையும் கொப்பளித்து விட்டு பிறகு மூஞ்சை சுருக்கிக் கொண்டு அடுத்த நாள் மன்னிப்பு கேட்பதா. உணர்ச்சி வயப்படல் தன்னைப்பற்றி இருந்து விட்டால் தொல்லையில்லை.

பொதுக் கருத்தில் உணர்ச்சி வயப்பட்டால் அது தமக்கு தாமே வைத்துக் கொள்ளும் சூனியம். சர்சைக்குரியவைகளை பேசப் பேச கூட்டத்தில் குதூகலம் உண்டாகும்தான். பிறகு அவர்கள் களைந்து போவார்கள். அதற்குண்டான விமர்சனத்தில் பேசியவர் களைத்துப் போக வேண்டும். காலம் மாறி விட்டது. கல்லால் அடித்த காலம் போய் இது செல்லால் அடிக்கும் காலம்.

விமர்சனத்திற்குள்ளாகும் என்பதால் பேசாமல் இருக்க சொல்லவில்லை. அதில் பொருளும் பொதிந்திருக்கிறதா என்பதை முன்கூட்டியே திட்டமிட்டு பிறகு பேச வேண்டும். இதயத்தில் இருந்து பேசுகிறேன் பேரில் மற்ற இதயங்களை கிழித்துப் போடுதல் பேச்சுக்கு அழகல்ல.

திக்கித் திணறி எழுத்துக்கூட்டி என்ன இது பார்த்து படிப்பதிலும் இத்தனை சிக்கல். எங்கே

இறக்க வேண்டும்? எங்கே ஏற்ற வேண்டும்? முற்றுப்புள்ளிக்கு எத்தனை நொடி இடைவெளி விட வேண்டும்? காற்புள்ளிக்கு எத்தனை நொடி விட்டெடுக்க வேண்டும்? ஒரு வாக்கியம் முடியாமலே காகிதத்தில் அடுத்த வரி கீழே வந்தால் அதை எப்படி கோர்த்துக் கொண்டு வர வேண்டும்? என எந்த ஒன்றும் தெரியாமல் திணறுவதைக் காண பயமாக இருக்கிறது. செம்மொழிக்கு இந்த நிலை என்பது இழுக்கு.

படிப்பறிவில்லாத கிராமத்து மனிதர்களின் பேச்சைக் கவனித்துப் பாருங்கள். மொழி வளம் இல்லாமல் இருக்கலாம். மூளை வளம் இல்லாமல் இருக்காது. படிப்பறிவு இல்லாமல் இருக்கலாம். பட்டறிவு படர்ந்து இருக்கும். சுற்றி வளைத்து பேசினாலும் இறுதியில் புரிந்து விடும். மொட்டை மொட்டையாக பேச மாட்டார்கள். வட்டமடித்தாலும் வானம் காட்டிக் கொடுக்கும் கழுக்குப்பார்வை அவசியம் கண்ணுங்களா.

தமிழை தமில் என்று சொல்வதைக் கண்டு மிரண்டு போகும் தருணத்தில்... தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்ற வரிகளை வேகமாய் மீண்டும் ஒருமுறை படித்துக் கொண்டேன். மனநிறைவு கொள்ளச் செய்யும் எம்மொழிக்கு இப்படியெல்லாம் கலங்கம் ஏற்படுத்துவதை பொறுக்க முடியவில்லை.

பேச்சுத் தமிழாக இருந்தாலும் எழுத்துத் தமிழாக இருந்தாலும்... எந்த ஊர் வட்டார தமிழாக இருந்தாலும்.. மடை திறந்த வெள்ளமென பாய வேண்டாமா எம் தமிழ். காடதிர பாயும் புலி அல்லவா என் மொழி.

— கவிஜி

---

# மரணத்தின் ஆட்டம்!

கொடிய நரகம் வாழ்தல்
இரட்சித்து மீட்கிறது
பேரன்பின் மரணம்.

### தீராத நோயின் துயரை

நிரந்தர உறக்கத்தால்
எளிதாய்க் குணமாக்கும் மரணம்.

### எல்லாரும் ஒதுக்கி வைத்தாலும்

காதலியின் குழைவோடு
கட்டியணைத்துப் பூரிக்கும் மரணம் .

### மரணம் தின்று ருசித்த

எச்சில் மாமிசத்தை
நெருப்புக்கோ?
நிலத்துக்கோ ?
படையிலிட்ட பின்
சிவலோகம்

பரலோகம்
வைகுண்டம்
என்ன மயிருக்கு?

## வீடுநிறைய துக்கத்தின் தேம்பல்

வீதிநிறைய கொண்டாட்ட கூச்சல்
பெரிய வீட்டு மரணம்.

## எல்லாரின்

இறுதிப் பயணத்தின் ஒத்திகை
செத்துப் பிழைத்து
அனுதினம் அரங்கேற -
எதிரில் வருகிறது
உதிரிப்பூக்கள் மணக்க
மற்றுமொருவரின்
மயானத்துக்கான ஊர்வலம்

## நீயென் அகால மரணத்தை

அன்புடன் விரும்பி
இடையறாது வேண்டுகிறாய்

## அவ்வளவு எளிதல்ல

உன்னை விட்டுச்
சட்டென்று விலகுதல்

கருணையற்ற எமனின்
கடைக்கண் பார்வைக்குக்
காத்திருக்கிறேன்

அவனின் தீவிரப்பசி
எனை மென்றுத் தின்னும் நாளைத்
தண்டோரா முழங்கி
உலகுக்கே அறிவிக்கிறேன்

நேரில் கொண்டாடிச்
மண்ணையும் பாலையும்
மறக்காமல் போட்டு
இதயம் நிறைந்து செல்.

## மரணத்தின் சாயலில்

எதிர்வரும் நபரை
வாரியணைத்து மகிழ்கிறது
நாதியற்ற மூப்பின்
நலிந்த இதயம்.

## காதலியின் மடியும்

மரணத்தின் மடியும்
என்றும் இனியவை
சொர்க்கத்தின் வாசல்தான்
இரண்டும்.

## மரணத்தைக் கண்டு

சிறு அச்சமும் வேண்டாம்
சக மனிதனின்
தீராத வன்மங்கள்
அதற்கில்லை
முடிந்த வாழ்வின்
சிக்கலான கணக்குகளை
ஒருநொடியில் தீர்வுகாணும்
இயற்கையின் அற்புதம் அது.

## எல்லா ஆட்டத்திற்கும்

முடிவுரை எழுதும்
மகத்தான ஆட்டம்
மரணத்தின் ஆட்டம்

## பாடையில் செல்பவன்

அறிந்திருக்க வாய்ப்பில்லை
புதைக்க இடமின்றி

மின் மயானத்தில்
சாம்பலாவோம் என்று.

## வாழ்வை வெறுத்து

மரணத்தை யாசிக்கிறேன்
பேரருளாய் வேண்டாம்
பிச்சையாய் வாய்க்கினும்
ஏக சம்மதம்

## நேசித்த இதயத்தின்

கதவுகள் தாழிட
நாயென வீதியில் பிழைத்தல்
தன்மானத்தின் சாபம்

## வளர்த்த பாசத்தின் கொடுஞ்சொல்

புளியாய் உலுக்கிறது நெஞ்சை
குளைசாய்ந்த வாழையின் அடிமரம்
அரிவாளின் பசிக்கு அர்ப்பணம்


பகலின் அத்தனைக் கிளைகளிலும்
இருமாந்த வாழ்ந்த
கோட்டான்களின் புலம்பல்
துளிர்விடும் நட்சத்திரத்தின்
தேகம் முழுக்க
கூரிய ஒளியின் வன்பகை

தோரோட்ட வீதியில்
தத்தித் தவழ்ந்து நடைபயிலும்
சிறுகுழந்தையின் புன்சிரிப்பில்
வீழாமல் மிச்சமிருக்கிறது
வனமற்ற குயிலின்
முகாரி இராகம்.

--

**பொன். தெய்வா,**
ஐவேலி.
விழுப்புரம் மாவட்டம்.





ஓவியம்:
**R. ஜெய்நடேஷ்,**
ஏழாம் வகுப்பு,
கல்விராயன்விடுதி.

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.